**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.
2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 02 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**இ.ம.எண்.08/2025**

IN

**அசல் வழக்கு எண்.343/2015**

1. மகாராஜன் ....மனுதாரர்/3 ம்பிரதிவாதி
2. அன்னத்தாய்
3. ராமாத்தாள்
4. வள்ளித்தாய் ....மனுதாரர்கள்/1, 2,6 பிரதிவாதிகள்

/எதிர்/

1. செல்வராஜ் ...1ம் எதிர்மனுதாரர்/வாதி
2. சீனிப்பாண்டி (எ) சீனிவாசன்
3. அன்னராஜ்
4. கனித்தாய் (எ) கனியம்மாள் ....2 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/ 4, 5, 7 பிரதிவாதிகள்

இம்மனுவானது 04.11.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.தமிழசரன் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.கிளாஸ்டின் அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் தோன்றாத் தரப்பினர்களாக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனுவை பொறுத்தும் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், 4ம் எதிர்மனுதாரர்/7வது பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.S.S.பிரதாப்ராஜ் அவர்கள் ஆஜராகியும் No Counter என மேற்குறிப்பு செய்துள்ள நிலையிலும், மனு, 1வது எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை மற்றும் அசல் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், மனுதாரர்கள் தரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.12.02 17:30:17 +0530

இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரர்களால் இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 1(a)–ன் கீழ் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் ஆவணங்களை இவ்வழக்கில் ஏற்றுக் கொள்ளக் கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர்கள்/1, 2, 3 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:–**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 3ம் பிரதிவாதி என்றும், இவ்வழக்கில் கட்டாய விசாரணையின்போது இதன் மனுவில் கண்டுள்ள ஆதரவுகளை முன்னமே தாக்கல் செய்ய தவறிவிட்டது என்றும், மேற்படி ஆதரவுகள் தற்போதுதான் கிடைத்துள்ளது என்றும், மேற்படி ஆதரவுகளை வாங்கி அங்கீகரித்துக் கொள்ள உத்தரவாக வேண்டியுள்ளது என்றும், இல்லாவிடில் மனுதாரர்/3ம்பிரதிவாதிக்கு மிகுந்த கஷ்ட, நஷ்டங்கள் ஏற்படக்கூடியதாக உள்ளது என்றும், ஆகையால் இவ்வழக்கின் கட்டாய விசாரணையின்போது இதன் மனுவில் கண்டுள்ள ஆதரவுகளை முன்னமே தாக்கல் செய்யாத தவறுதலையும் காலதாமதத்தையும் மன்னித்து மேற்படி ஆதரவுகளை வாங்கி அங்கீகரித்துக் கொள்ள உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **1வது எதிர்மனுதார்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-**

மனுதாரரின் மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், 3ம் மனுதாரர் தாக்கல் செய்துள்ள பட்டா எண்.169 ஆனது, வீரபுத்திர தேவர் மகன் கட்டாரித்தேவர் என்பவரின் பெயரில் உள்ளது என்றும், இந்த 3ம் மனுதாரரின் தந்தையும், எதிர்மனுதாரரின் தந்தையும் உடன்பிறந்தவர்கள் என்பதாலும், கட்டாரித்தேவர்தான் வீரபுத்திரத்தேவருக்கு மூத்த மகன் என்பதாலும் 3ம் மனுதாரரின் தந்தையின் பெயரில் பட்டா உள்ளது என்றும், இந்த 3ம்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.12.02 17:30:24 +0530

மனுதாரரின் தந்தையின் பெயரில் பட்டா உள்ளதால் 3ம் மனுதாரருக்கு மட்டுமே தபசில் சொத்தில் உரிமை இருப்பதாக கூறுவது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை என்றும், எனவே மனுதாரர்/3ம் பிரதிவாதியின் மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 4ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்படவில்லை.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, 1வது எதிர்மனுதார்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, அசல் வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர்கள் தரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன. 1வது எதிர்மனுதாரர் வாத உரையின்போது ஆஜராகாததால் 04.11.2025ல் 1வது எதிர்மனுதாரர் தரப்பு வாத உரை இந்நீதிமன்றத்தால் முடித்து வைக்கப்பட்டுள்ளது.

5) அசல் வழக்கானது பாகப்பிரிவினை பரிகாரம் கோரியும், இதர பரிகாரங்கள் கோரியும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) மனுதாரர்களால் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை விரைந்து தாக்கல் செய்யாததற்கு எவ்வித விளக்கமும் மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவில் தெரிவிக்கப்படவில்லை.

7) மேலும், இம்மனுவின் 1வது எதிர்மனுதாரர் தரப்பில் 3ம் மனுதாரர் தாக்கல் செய்துள்ள பட்டா எண்.169 ஆனது, வீரபுத்திர தேவர் மகன் கட்டாரித்தேவர் என்பவரின் பெயரில் உள்ளது என்றும், இந்த 3ம் மனுதாரரின் தந்தையும், எதிர்மனுதாரரின் தந்தையும் உடன்பிறந்தவர்கள் என்பதாலும், கட்டாரித்தேவர்தான் வீரபுத்திரத்தேவருக்கு மூத்த மகன்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.12.02 17:30:31 +0530

என்பதாலும் 3ம் மனுதாரரின் தந்தையின் பெயரில் பட்டா உள்ளது என்றும், இந்த 3ம் மனுதாரரின் தந்தையின் பெயரில் பட்டா உள்ளதால் 3ம் மனுதாரருக்கு மட்டுமே தபசில் சொத்தில் உரிமை இருப்பதாக கூறுவது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை என்றும் இம்மனுவுக்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

8) இருப்பினும், அசல் வழக்கானது 1, 2, 3 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பு சாட்சி விசாரணைக்காக நிலுவையில் இருப்பதால் மனுதாரர்களால் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் இவ்வழக்கிற்கு சிறந்த நீதிமுறை தீர்மானிப்பிற்கு அவசியமானது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

9) ஆகையால், மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களானது நிரூபணம் மற்றும் தொடர்புடைமைக்குட்பட்டு இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

10) எனவே, மேற்கண்ட பரிசீலனையிலிருந்து இம்மனுவானது நீதியின் நலன் கருதி நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படத்தக்கது என்று இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

**11) இறுதியாக**

இம்மனுவானது இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தின் நிரூபணம் மற்றும் தொடர்புடைமைக்குட்பட்டு (Subject to Proof and Relevancy) ரூ.250/- (ரூபாய் இருநூற்று ஐம்பது மட்டும்) நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி தொகையினை 1வது எதிர்மனுதார்/வாதிக்கு நேரடியாக 15.12.2025ம்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.12.02 17:30:39 +0530

தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 15.12.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 02 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2025.12.02 17:30:45 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> :–

– இல்லை –

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2025.12.02 17:30:50 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**மு.மா.உ. நீதிமன்றம்,**
**சங்கரன்கோவில்,**

I.A.No.08/2025
in
O.S.No.343/2015

**உத்தரவு (Draft / Fair)**
**நாள் : 02.12.2025**